**மறுக்கப்பட்ட காசோலை, இரத்து செய்யப்பட்ட கழிவு தவணை தப்பிய கடன் மீதான வட்டி தாக்கீடும், எதிர் தீர்த்தலும்**

01) தயாணி வணிகத்தின் 2021.01.01ல் காணப்பட்ட மீதிகள் வருமாறு :

| | | |
|---|---|---|
| காசுமீதி | | 100,000 |
| தொக்குகள் | | 50,000 |
| க.கொடுனர் | A | 5,000 |
| | B | 8,000 |
| | C | 6,000 |
| | D | 10,000 |
| | E | 1,000 |
| க.படுனர் | E | 300 |

அம்மாதத்தில் கடன்கொடுனர் தொடர்பாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.

2021-01-02 A கடன் தவணை தப்பியமையால் 2% வட்டி சேர்க்கப்பட்டது.

2021-01-02 B யிடம் கொள்வனவு 10,000 ரூபா

2021-01-02 B யிடம் 10% கழிவு பெற்று 4,500 ரூபா காசோலை கொடுக்கப்பட்டது.

2021-01-02 B யிற்கு திருப்பிய பொருள் 1,000 ரூபா

2021-01-02 X யிடம் கொள்வனவு 1,500 ரூபா

2021-01-02 X யிற்கு திருப்பிய பொருள் 500 ரூபா

2021-01-02 C யிடம் கொள்வனவு 10,000 ரூபா

2021-01-02 C யிற்கு திருப்பிய பொருள் 1,500 ரூபா

2021-01-02 C யிடம் 500 கழிவு பெற்று 5,500 ரூபா காசோலை கொடுக்கப்பட்டது.

2021-01-02 D யிடம் 10% கழிவு பெற்று 3,600 ரூபா காசோலை கொடுக்கப்பட்டது.

2021-01-02 D யிடம் கொள்வனவு 7,500 ரூபா

2021-01-02 D யிற்கு திருப்பிய பொருள 500 ரூபா

2021-01-02 E யின் வருமதி தொகை சென்மதி தொகைக்கு எதிரீடு செய்யப்பட்டது.

2021-01-02 B யின் காசோலை மறுக்கப்பட்டதால் அவனிடம் பெற்ற கழிவும் ரத்து செய்யப்பட்டது.

**மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களை**

**உரிய மூலேடுகளில் பதிவு செய்க.**

**பொதுப்பேரேட்டை தயாரிக்க. (க.கொ கட்டுப்பாட்டு கணக்கு உட்பட)**

**பொதுப்பேரேட்டிலிருந்து பரீட்சை மீதி**

**கொள்வனவு பேரேட்டை தயாரிக்குக.**

**கடன்கொடுனர் பட்டோலை தயாரிக்க.**